<u>பத்திரிகைச் செய்தி</u>

**கச்சத்தீவு விழிப்புணர்வு நடைபயணம்!**

**தேதி : 03.09.2021 (வெள்ளி)**

**நேரம் : மாலை 4 மணி**

**இடம் : சென்னை பத்திரிகையாளர் மன்றம்**

நான் கச்சத்தீவு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக சென்னை முதல் தனுஷ்கோடி வரை **3.9.2021 முதல் 27.9.2021** வரை தனிநபராக ஜனநாயக வழியில் நடைபயணம் செல்ல திட்டமிட்டு இன்று (3.9.2021) சென்னை மெரினா கடற்கரையில் **தமிழ்நாட்டு பாதுகாப்பு, தமிழ்நாட்டு மீனவர்கள் நலன், இந்திய பாதுகாப்பு மற்றும் இறையாண்மை** ஆகியவை தொடர்பான எனது நடைபயணத்தை தொடங்கிய சில மணித்துளிகளில் காவல்துறையால் அனுமதி மறுப்பு செய்யப்பட்டு கைது செய்யப்பட்டேன். தற்பொழுது ஒத்தி வைக்கப்பட்டுள்ள இந்த விழிப்புணர்வு நடை பயணத்தின் அடுத்த கட்ட நகர்வுகள், நோக்கங்கள் போன்றவற்றை தெரிவிப்பதற்காக இந்த பத்திரிகையாளர் கூட்டத்தை ஒழுங்கு செய்து உள்ளேன்.

**நோக்கங்கள்:**

கச்சத்தீவு வரலாற்று ரீதியாகவும் அண்மைக்கால சாட்சியங்கள் ரீதியாகவும் தமிழர் நிலம், தமிழக நிலப்பரப்பிற்கும் இந்திய இறையாண்மைக்குட்பட்ட பகுதியாகும். அத்தகைய தீவு/நிலப்பகுதியானது 1974, ஜூன் மாதம் அன்று அன்றைய இந்திய அரசு இலங்கை அரசுக்கு நாடாளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்படாத (இந்நாள் வரையில்) ஒப்பந்தம் மூலமாக தாரைவார்த்து கொடுத்தது.

அதற்கு பிறகு தமிழக மீனவர்களின் பாதுகாப்பற்ற சூழலும், வாழ்வாதார இன்னல்களும், உயிரிழப்புகளும் தொடர்ந்து நடைபெற்று வருவதோடு கடந்த பத்தாண்டுகளுக்கு மேலாக சீனாவின் ஊடுருவல் மற்றும்

இராணுவ கட்டுமானங்கள் காரணமாக தமிழக மக்களின் பாதுகாப்புக்கும் இந்திய தேசிய பாதுகாப்புக்கும் மிகப்பெரிய அச்சுறுத்தல்கள் உருவாகியுள்ளது.

இத்தகைய சூழலில் இந்திய அரசாங்கம் கச்சத்தீவினை இலங்கை அரசாங்கத்திடமிருந்து திரும்ப பெறவேண்டும் என்பதோடு தமிழர் நிலம், தமிழக மீனவர்களின் பாதுகாப்பு, இந்திய தேசியத்தின் இறையாண்மை ஆகியவற்றை கருத்தில் கொண்டு மாண்புமிகு தமிழக முதல்வர் திரு மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான தமிழக அரசு அதற்கான பரிந்துரைகளை ஒன்றிய அரசிடம் முன் வைப்பதோடு, கச்சத்தீவை திரும்ப பெறுவதற்கான தீர்மானத்தையும் சட்டசபையில் நிறைவேற்றிட வேண்டும் என கோரிக்கையாக முன்வைக்கிறோம்.

நாங்கள் முற்றும் முடிவாக சொல்ல வருவது என்னவென்றால், மாநில அரசின் ஒப்புதல் இன்றி, நாடாளுமன்றத்தின் ஒப்புதல் இன்றி, அன்றைய இந்திய அரசு தன்னிச்சையாக இலங்கைக்கு கச்சத்தீவினை தாரைவார்த்தது அரசியல் சாசனத்திற்கு முரணானது என்பதோடு, இதனால் பெரிதும் வாழ்வாதார பாதிப்புகளையும் உயிரிழப்புகளையும் சந்தித்தது தமிழக மீனவர்களே என்பதால் அரசியல் சாசனத்திற்குட்பட்டு கச்சத்தீவினை திரும்ப பெற வேண்டும் என்பதற்காக இந்த விழிப்புணர்வு நடைபயணத்தை திட்டமிட்டபடி சட்டரீதியாக அனுமதியைப் பெற்று விரைவில் ஆரம்பிக்க திட்டமிட்டுள்ளோம்.

நன்றி

பேராசிரியர் மணிவண்ணன்

தொடர்புக்கு: 9500555321,842811499,8248222788,8148471653